(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 183.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2017 யூலை 27 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1046/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளூராட்சித் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் பற்றிய மேன்முறையீட்டு விசாரணைகள் முடிவடைந்துள்ள போதிலும் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முடியாதுள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அல்லது அதன் முன்னைய தேர்தல் திணைக்களத்தினால் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய குறைபாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி குறைபாடுகளில் தேர்தல்களை நடத்த முடியாத மட்டத்திலான குறைபாடுகள் இருப்பின், அவை யாவையென்பதையும்;

(iv) மேற்படி குறைபாடுளை தேர்தல்கள் ஆணைக்குழு அல்லது அதன் முன்னைய தேர்தல் திணைக்களம் எழுத்து மூலமாக அறிவித்துள்ள திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1051/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே மாநகரசபை ஆளுகை பிரதேசத்தில் உள்ள அரசாங்க கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வமைச்சுக்கள் பேணிவரப்படும் அரசாங்க கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(iii) குத்தகைக் கூலி செலுத்தும் மற்றும் செலுத்தாத அமைச்சுக்கள், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) குத்தகை செலுத்தும் அமைச்சுக்கள், ஒரு சதுர அடிக்குச் செலுத்தும் குத்தகைக் கூலி மற்றும் சேவைக் கட்டணம், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) இந்தக் கட்டடங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக கொடுப்பனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனின், இத்தொகை யாதென்பதையும்;

(vii) வாகனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு முறையியல் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் உள்ள தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படும் அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வமைச்சுக்கள் பேணிவரப்படும் கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்கட்டிடங்களில் ஒரு சதுர அடிக்கு செலுத்தும் குத்தகைத் தொகை மற்றும் சேவைக் கட்டணம், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) இக்கட்டிடங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக உள்ள இடப்பரப்புக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1076/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான ஹப்புத்தளையிலுள்ள காணிகளில் 75 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம்தொட்டு இன்று வரை வசிக்கும் மக்களிடம் ஆண்டுதோறும் வரி அறவிடப்படுகிறது என்பதையும்;

(ii) மேற்படி ஆண்டு வரி 1970 இல், ரூபா 75/- இற்கும் ரூபா 80/- இற்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்டதுடன், இன்றளவில் அத்தொகை ரூபா 10,000/- இற்கும் ரூபா 25,000/- இற்கும் இடைப்பட்ட தொகையாக அதிகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) ஒரே காணியின் ஒரு பகுதியில் வசிப்பவர்களுக்கு உறுதிகள் மூலம் உரித்தளிக்கப்பட்டுள்ள நிலையில், அதே காணியின் வேறொரு பகுதியில் வசிப்பவர்களுக்கு வரி செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) வரித் தொகை செலுத்தப்படாவிடின், காணிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1930 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இக்காணிகளில் வசிக்கும் இவர்களிடமிருந்து தற்போது அறவிடப்படும் அதிக வரியினைக் குறைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி காணிகளை அவற்றில் வசிப்பவர்களுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1116/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை பண்டாரவெல நகர சபைக்கு;

(i) உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை;

(ii) மாகாண சபையினால் வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை;

ஆண்டு ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை உள்ளூராட்சி அமைச்சினாலும் ஊவா மாகாண சபையினாலும் பதுளை மாவட்டத்தின் ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை ஆண்டு ரீதியாக தனித்தனியாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1171/ '16

கௌரவ ( டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தின், சம்மாந்துறையில் நடைபெற்ற "தயட்ட கிருள" கண்காட்சிக்கு வருகைதந்த விருந்தினர்களுக்கு பாதுகாப்பு நல்குவதற்காகவும் வாகனங்களை தரித்து வைப்பதற்காகவும் வலதாபிட்டிய பிரதேசவாசிகளின் வயற் காணிகளை பாதுகாப்புப் படையினர் தற்காலிகமாக சுவீகரித்துக்கொண்டார்கள் என்பதையும்;

(ii) மேற்படி காணிகளை பயன்படுத்தியமைக்காக எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) தற்போது வெறுமையாக உள்ள இக்காணிகளில் பயிர்செய்கையை மேற்கொள்வதற்கு காணி உரிமையாளர்கள் முயற்சித்தபோதிலும், இதற்கு இராணுவ உத்தியோகத்தர்கள் இடமளிப்பதில்லை என்பதையும்;

(iv) மேற்படி காணிகளை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்காணிகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1193/'16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1308/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊடகவியலாளர் திரு. லசந்த விக்கிரமதுங்கவை தாமே படுகொலை செய்ததாக குற்றஒப்புதல் குறிப்பொன்றை எழுதிவிட்டு கேகாலை பிரதேசத்தின் ஓய்வுபெற்ற புலனாய்வு பிரிவின் அங்கத்தவர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதென்பதையும்;

(ii) இது தற்கொலையா அல்லது படுகொலையாவென சந்தேகம் எழுந்துள்ளதாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் விஷேட ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளாரென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஓய்வுபெற்ற புலனாய்வு பிரிவு அங்கத்தவரின் மரணம் பற்றி பிரேத பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மருத்துவ முடிவு யாதென்பதையும்;

(iii) நிகழ்ந்தது தற்கொலை இல்லையெனில், மரணத்திற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) பொறுப்புவாய்ந்த ஒரு பிரசை என்ற வகையில் பிரதி அமைச்சர் வெளியிட்டுள்ள கூற்று பற்றி ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஊடகவியலாளர் திரு. லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை பற்றி மேற்கொள்ளப்படும் விசாரணையின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1381/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுதிட்டத்தின் 149 ஆம் இலக்க முன்மொழிவின் படி அநுராதபுரம், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கமத்தொழில், கால்நடை வளர்ப்பு, மீன் உற்பத்தி வலயங்களை நிறுவுவதற்கு ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) இந்த மூன்று கருத்திட்டங்களுக்குமான சாத்தியவள அறிக்கைகள் யாரால் தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(iii) இதன்படி, இந்த மூன்று கருத்திட்டங்களுக்காகவும் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மூன்று கருத்திட்டங்களுக்காகவும் 2016 ஆம் ஆண்டு நிறைவடையும் போது திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

(v) 2017 ஆம் ஆண்டுக்காக மேற்படி கருத்திட்டத்தின் சார்பில் வழங்கப்படக்கூடிய நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1466/ ’16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்களில் வசிக்கின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்களிலிருந்து இலவசமாக கூரைத் தகடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்களை பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட கூரைத் தகடுகள் பகிர்ந்தளிக்கப்படுதல் தடைசெய்யப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி தடையை நீக்கி, முன்னர் இருந்ததைப்போல் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக கூரைத் தகடுகளைப் பகிர்ந்தளிக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1478/ '16

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தில், மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பாடசாலைகளில் நிரந்தர அதிபர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது பதில் கடமையாற்றும் அதிபர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) கடந்த வருடம் நடத்தப்பட்ட அதிபர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் வடமேல் மாகாணத்தில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது பெயர்கள் யாவை;

(v) மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தற்போது சரியான விதத்தில் பணியிடங்களுக்கு அமர்த்தப்பட்டுள்ளார்களா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1598/ ’17

கௌரவ துஷார இந்துநில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கதக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “*ரட்டம எலியய் – அந்துர துரலய்*” எனும் தேசிய மின்சார உபசரணை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்திட்டத்தின் கீழ் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனி (லெக்கோ) என்பவற்றினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்காக இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனி என்பவற்றினால் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தற்போது இலங்கையின் வீட்டு அலகுகளில் எத்தனை சதவீதத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1603/ '17

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு நகருக்கு மின்சாரத்தை வழங்கும் நிலக்கீழ் மின்சார வழங்கல் முறையொன்று சுமார் 03 வருட காலமாக செயலிழந்துள்ளமை பற்றி அறிவாரா;

(ii) மேற்படி மின்சார வழங்கல் முறையின் மின்சார வழங்கல் கொள்ளளவு யாது;

(iii) குறிப்பிட்ட வழங்கல் முறையை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் தாமதம் அடைவதற்கான காரணம் யாது;

(iv) மேற்படி வழங்கல் முறையின் திருத்தியமைத்தல் தாமதமடைதல் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் யார்;

(v) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் எதிராக அமைச்சு அல்லது இலங்கை மின்சார சபையினால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்காற்று நடவடிக்கை வெவ்வேறாக யாது;

(vi) கொழும்பு நகரில் தொடர்ச்சியான மின்சார வழங்கலை உறுதிப்படுத்தும் முகமாக மின் அனுப்பல் முறைமையினை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1609/ '17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு டிப்போவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(ii) இந்த ஊழியர்கள் மத்தியில் நட்டஈட்டினைப் பெற்றுக்கொண்டு சேவையிலிருந்து நீங்க விண்ணப்பித்துள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு டிப்போவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(iii) கடந்த காலப்பகுதியில் இந்த ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதி செலுத்துதல் முறைப்படி இடம்பெற்றுள்ளதா;

(iv) இவர்களுக்கு நட்டஈடு செலுத்தப்படுகின்ற விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1707/ ’17

கௌரவ விதுர விக்கிரமநாயக்க,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் மற்றும் நுண்பாக கைத்தொழில்களுக்கு சலுகை வட்டியின் அடிப்படையில் இரண்டு வருடகால சலுகைக் காலத்துடன் SMILE III கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதையும்;

(ii) கருத்திட்ட பணிப்பாளரினால் 2016 யூலை மாதம் 10 ஆம் திகதி பத்திரிகைகளில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு, கடன் வழங்குதல் சம்பந்தமாக பிரச்சாரம் செய்யப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் கடன் வழங்குவதற்கு 10 வர்த்தக வங்கிகள் முன்வந்ததுடன், கடனை எதிர்பார்த்து 5000 கடன் விண்ணப்பதாரிகள் முன்வந்த போதிலும் கடன் வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) பல தொழில்முயற்சியாளர்களினால் தேவையான அடிப்படை செலவுகள் மேற்கொள்ளப்பட்டு பிணை உறுதிகளை கைச்சாத்திடல், ஈட்டுறுதிகளை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள போதிலும் கடன் வழங்கப்படவில்லை என்பதையும்;

(v) இந்த நிலைமையின் காரணமாக புதிய தொழில்முயற்சிகள் மற்றும் மேம்படுத்தப்படும் தொழில்முயற்சிகள் இடைநடுவே தடைப்பட்டுள்ளதுடன், இது தேசிய பொருளாதாரத்திற்கும் பெரும் தாக்கமாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கடன் தொகையை வழங்குவதற்கு ஆற்றல் இல்லையெனில், 2016.07.10 ஆம் திகதிய பத்திரிகைளில் அறிவித்தல்களை வெளியிட்டு மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கியதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1328/ '16

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்டபதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் காணப்படும் காற்று மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து இலங்கை மின்சார சபை மின் அலகொன்றைப் பெற்றுக்கொள்ளும் விலையானது ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையங்களில் வ/ப எல்டீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனிக்குச் சொந்தமான மின் உற்பத்தி நிலையங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆனையிறவில் நிர்மாணிக்கப்படும் புதிய காற்று மின் உற்பத்தி நிலையத்திலிருந்து இலங்கை மின்சார சபைக்கு மின் அலகொன்று வழங்கப்படும் விலை யாது;

(ii) காற்று மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து குறைந்த விலையில் மின் அலகொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(iii) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் திரவ எரிவாயு உட்பட அனைத்து வகையான எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் மற்றும் சுங்க கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக துறைமுகம் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு துறைமுகத்திலும் கப்பலில் இருந்து எண்ணெய் அல்லது எரிபொருளை அகற்றுதல், கொண்டுசெல்லல், இறக்குதல், களஞ்சியப்படுத்தல், ஒப்படைத்தல் அல்லது அகற்றுவதுடன் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அல்லது அத்தியாவசியமான அனைத்து சேவைகள், வேலைகள் அல்லது எந்த வகையிலுமான ஊழியத்தைப் பயன்படுத்தல் போன்ற சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள எந்தவொரு அரச கூட்டுத்தாபனத்தினூடாக அல்லது அரச திணைக்களத்தினூடாக அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தினூடாக அல்லது கூட்டுறவுச் சங்கத்தினூடாக அல்லது அவற்றின் கிளையினூடாக வழங்கப்படும் சேவைகள் பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அத்தியாவசியமெனக் கருத்திற்கொண்டு மற்றும் அந்தச் சேவைகளை வழங்குவதற்கு இடைஞ்சல் அல்லது தடைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு நிலவுவதன் காரணமாக எந்தவொரு அரச கூட்டுத்தாபனத்தினூடாக அல்லது அரச திணைக்களத்தினூடாக அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தினூடாக அல்லது கூட்டுறவுச் சங்கத்தினூடாக அல்லது அவற்றின் கிளையினூடாக வழங்கப்படும் சேவைகள் மேலுள்ள உறுப்புரையின் அலுவல்கள் தொடர்பில் அத்தியாவசிய சேவைகளாக சனாதிபதியினால் 2017 யூலை 25 ஆம் திகதிய 2029/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் ஊடாக, 2017 யூலை மாதம் 25 ஆம் திகதி முதல் இலங்கை முழுவதும் அமுல்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

(2017 யூலை 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது)

* 2.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் பிரிவு 6 (உ) மற்றும் பிரிவு 21 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 51 கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017, மார்ச்சு 08) [1].

* 5.

சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

உண்ணாட்டரசிறைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவக சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் திருத்தம் மேற்கொள்ளல்,—

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41(ஆ) ஆவது உறுப்புரை மற்றும் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 3 மற்றும் 3(4) பிரிவுகளின் பிரகாரம், மனித உரிமைகள் துறை சம்பந்தமான பரந்தளவிலான அறிவு மற்றும் செயன்முறை ரீதியிலான அனுபவத்தைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சட்டத் திணைக்களத்தின் தலைவராக பணியாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக மூன்று (03) வருட காலத்திற்கு 2015.10.30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

2015.10.30 ஆம் திகதி முதல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக கடமையாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்கள் மூன்று (03) வருட சேவைக் காலத்தின் பின்னர் மீண்டும் தனது நிரந்தரப் பதவிக்குச் செல்வதற்கு கருதியிருப்பதுடன், இந்த மூன்று (03) வருட காலப் பகுதியில் சகல படிகளும் உள்ளடங்கலான பல்கலைக்கழகச் சம்பளத்தை அவர் இழந்தால் அவருக்கு கிடைக்க வேண்டிய அனுகூலங்கள் மீது பாதிப்பு ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளாராதலாலும்;

அதற்கமைய, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவராக கடமையாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்களுக்கு தனிப்பட்ட வகையில் செல்லுபடியாகும் வகையில் அவர் சேவையாற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சகல படிகளும் உள்ளடங்கிய முழு நேர விரிவுரையாளருக்குரிய சம்பளத்தை 2015.10.30 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கும், ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்குரித்தான ரூபா 10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவு, தனிப்பட்ட பாவனைக்கு உரிமையைக் கொண்ட உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் அந்த வாகனத்திற்கு 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தையில் நிலவும் எரிபொருளுக்கான விலைக்குச் சமமான எரிபொருள் கொடுப்பனவைச் செலுத்துவதற்கும் 2017.06.13 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாதலாலும்;

அதற்கமைய, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்களுக்கு அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்தச் சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆவது பிரிவின் கீழ், மருத்துவ உபகரணங்கள் விலை குறித்தல் தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 17 ஆம் திகதிய 2006/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 15.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மாச்சு 27 ஆம் திகதிய 2012/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

16.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---